www.tamilarangam.net

# தந்தை செல்வா நூற்றாண்டு விழா

## 1997



**சமஷ்டி மூலம் எங்களின் நோக்கத்தை அடைய முடியாது. ஆதலால் சமஷ்டி கோரிக்கையை கைவிட்டு தனிநாடு அமைக்க வேண்டும். இல்லையேல் அழிந்து விடுவோம்.**

நாடாளுமன்றத்தில்
தந்தை செல்வா 19.11.76

**ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி**

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈழத் தமிழருக்கான ஈழ தேசம் பாதுகாக்கப்பட வேண்டும்

ஈழத் தமிழ் மக்கள் கடந்த ஐம்பதாண்டு காலமாக உலகம் அறிய அனுபவித்து வரும் துன்பங்கள் அளவு கடந்தவை. தமது பிறந்த மண்ணிலும், உலகின் பல பகுதிகளிலும் அவர்கள் அனுபவித்து வரும் வேதனைகள் கல்லையும் கரைக்கத்தக்கவை. இவற்றை அறிந்தவர்கள் பலர் பேச்சுவார்த்தைகள், ஒப்பந்தங்கள், இணைந்து வாழும் முயற்சிகள் ஆகியவற்றின் மூலம் இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காணலாம் என்று கூறி வருகின்றார்கள். ஈழ வரலாற்றை முழுமையாகத் தெரிந்த எவரும் ஈழ மக்களின் பிரச்சனைக்கு இந்தப் பேச்சுவார்த்தைகள் தீர்வாக அமையாது என்பதை ஒப்புக் கொள்வார்கள்.

ஈழத் தமிழர்கள் இலங்கையின் ஆதிக் குடிகள். கிறிஸ்துவுக்கு முற்பட்ட ஆண்டு காலத்திலே அவர்கள் இலங்கையின் வடபகுதியில் நாகரிகம் பெற்ற மக்களாய் வாழ்ந்தனர் என்பதை அகழ்வாராய்ச்சிகளும், கல்வெட்டுக்களும், சரித்திர ஆவணங்களும், பழைமை வாய்ந்த நூல்களும் மற்றும் வெள்ளையரின் குறிப்பு ஏடுகளும் உறுதி செய்கின்றன. பௌத்த சிங்களக் குருமாரால் பாளி மொழியில் எழுதப்பட்ட 'மகா வம்சம்' என்ற வரலாற்று நூலே இதை ஒப்புக் கொள்கிறது.

**துட்டகைமுனு பரம்பரை**

கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் இந்தியாவின் வடக்குப் பகுதியிலிருந்து கடல் மார்க்கமாக ஈழத்தில் வந்திறங்கியவன்தான் விஜயன். இவன் தனது கூட்டாளிகளுடன் வந்திறங்கியபோது அங்கே திராவிட இனம்தான் வாழ்ந்து வந்தது. கி.மு. முதலாம் நூற்றாண்டில் எல்லாளன் என்ற நீதி வழுவா நேர்மை வாய்ந்த தமிழரசன் இலங்கை முழுவதையும் 44 ஆண்டுகள் (கி.மு.145 – 101) அரசாண்டான். இந்தத் தமிழ் அரசனிடம் பணிபுரிந்த ஓர் சிங்களப் பணியாளரது மகன் பெயர்தான் துட்டகைமுனு. தமிழ் மன்னனைக் கொலை செய்ய சதித் திட்டம் தீட்டியது கண்டு துட்டகைமுனுவின் தந்தையே அதனை எதிர்த்தான். அப்படியிருந்தும் எல்லாளனை நேர்மையற்ற முறையில் துட்டகைமுனு வென்று அரசன் ஆனான். இதன் பின்னர் எல்லாளனது மருமகனான பாலுக்கன் மிகப்பெரும் தமிழ்ப் படையினைத் திரட்டி மீண்டும் துட்டகைமுனுவை வீழ்த்தினான். தமிழ் மக்களுக்கு எதிரான பிரசாரத்தையும் போராட்டத்தையும் இந்தத் துட்டகைமுனு தான் ஆரம்பித்து வைத்தான்.

தமிழ் மக்களுக்கு எதிராகப் புதுமையான பிரசாரம் ஒன்றினை அந்த நாளில் துட்டகைமுனு (கி.மு. 101 – 68) மேற்கொண்டான். அவன் தூங்கும்போது கால்களை முடக்கி கழுத்தை மடித்துக் குறண்டிக் கொண்டுதான் தூங்குவான். இது அவனது பழக்கதோசம். பின்நாளில் அவன் பெரும் தளபதியானதும், அவனிடம் ஏனையோர் "எதற்காக நீங்கள் குறண்டிக் கொண்டு தூங்குகிறீர்கள்; கால்களை நீட்டி நல்லமுறையில் தூங்கலாமே" என்று கேட்டதற்கு "தெற்குப் பக்கம்



சொந்த மண்ணில் அகதியாக்கப் பட்டு போக்கிடமின்றி செய்வதறியாது தவிக்கும் ஈழத் தமிழ் மக்கள்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**தலைவைத்துத் தூங்க முடியவில்லை, அங்கே பெருங்கடல். வடக்குப் பக்கம் தலை வைத்துத் தூங்க முடியவில்லை, அங்கே தமிழர்கள். ஆதலால் குறண்டிக்கொண்டு தூங்குகிறேன்"** என்று பதில் கூறியிருக்கிறான். இந்தக் கூற்றைத்தான் தமிழருக்கு எதிரான தாரக மந்திரமாக இன்று வரை பள்ளிகள் முதற்கொண்டு பௌத்த விகாரைகளிலும் போதித்து வருகின்றனர். இது கிறிஸ்துவுக்கு முன் முதலாம் நூற்றாண்டில் கூறப்பட்டது. அன்று முதல் இன்று வரை இந்தப் பகை இருந்தே வருகிறது.

கி.பி. 1505–ல் போர்த்துக்கீசியர் இலங்கைக்கு வந்தபோதிலும் 1621–ல்தான் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினர். அப்படி முழு இலங்கையையும் கைப்பற்றும்வரை ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகள் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் மாறி மாறி யுத்தங்கள் மேற்கொண்டுதான் வந்துள்ளனர். இந்தக் காலங்களில் தமிழரது ஆளுமைக்குக் கீழ்தான் முழு இலங்கையும் நீண்டகாலமாக இருந்து வந்துள்ளது. சிங்களப் பகுதியான கண்டியை ஆண்ட கடைசி மன்னன் கண்ணுச்சாமி என்னும் தமிழன். அதேபோன்று யாழ்ப்பாணத்தை ஆண்ட கடைசி மன்னன் சங்கிலியன்.

போர்த்துக்கீசியருக்குப் பிறகு ஒல்லாந்தரும் அதன் பின்னர் பிரித்தானியருமாக மொத்தம் 327 ஆண்டுகள் இலங்கையை ஆண்டுள்ளனர். 1948–ல் பிரித்தானியர் இலங்கையை விட்டுச் சென்றபோது சிங்களவரது கைகளில் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்து விட்டு ஓடிச் சென்று விட்டனர்.

வெள்ளையன் வெளியேறியதும் பழைய துட்டகைமுனுவின் கொள்கையினை நடைமுறைப்படுத்த ஆரம்பித்து விட்டனர் சிங்களத் தலைவர்கள். முதல் வேலையாக துட்டகைமுனுவின் பெயரில் இராணுவத்தில் 'படைப்பிரிவு' ஒன்றை ஆரம்பித்தனர். அதன் பெயர் "கமுனு ரெஜிமென்ட்". துட்டன் என்பதை கைவிட்டு விட்டனர். இன்று மிகவும் கொடூரமான பலம் வாய்ந்த படை கமுனு படைப்பிரிவு ஆகும். கைமுனுவை துட்டகைமுனு என்றுதான் சிங்களவரது மகாவம்சம் கூறுகிறது. அந்த அளவு துட்ட குணங்களை உடையவன் கைமுனு. இந்தப் படைப்பிரிவுக்கு சிப்பாய்களைத் தேர்வு செய்யும்போது ஐந்தாம் வகுப்புக்குக்கீழ் படித்த சிங்களவர் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுவர் என்று அரசு அறிவித்தது. ஏனெனில் அப்போதுதான் துட்டகைமுனுவின் கொள்கையினைப் போதிப்பதற்குச் சுலபமாக இருக்கும் என்று அரசு கண்டுபிடித் திருந்தது.



**ஈழத் தமிழரின் சிறப்புமிகு வரலாற்று ஆதாரங்கள் கொண்ட யாழ் நூல்நிலையம். சிங்களப் படையால் எரிக்கப்படும் முன் உள்ள அழகிய தோற்றம்.**

கைமுனுவின் கொள்கை தமிழர்களை ஈழத்தை விட்டு விரட்டுவது அல்லது அழிப்பது. இந்தக் கொள்கையினைத்தான் ஆட்சிக்கு வந்த அனைத்து சிங்களத் தலைவர்களும் இன்றுவரை கடைப்பிடித்து வருகின்றனர். டி.எஸ்.சேன நாயக்கா, பண்டார நாயக்கா, சிறிமாவோ பண்டார நாயக்கா, ஜெயவர்த்தனா, பிரேம தாசா, விஜயதுங்கா, சந்திரிகா ஆகிய அனைவரும் இன்றைய துட்டகைமுனுக்களே.

### சந்திரிகாவின் உண்மைத் தோற்றம்

சந்திரிகாவின் ஓர் செயலை இங்கே சுட்டிக் காட்ட வேண்டும். யாழ்ப்பாணத்தைச் சிங்கள இராணுவம் கைப்பற்றியதும் ரத்வதையும், சந்திரிகாவும் கண்டியில் உள்ள பௌத்த பீடமான தலதா மாளிகாவுக்குச் சென்றனர். அங்கிருக்கும் தலைமை பௌத்த குருவான தேரோவைச் சந்தித்து சந்திரிகா அவரது காலில் விழுந்து "நான் யாழ்ப்பாணத்தை வென்றுவிட்டேன். என்னை ஆசிர்வதியுங்கள்" என்று ஆசி பெற்றார். இது அனைத்துப் பத்திரிகை களிலும் வெளிவந்த செய்திதான். கடந்த இரண்டா யிரம் ஆண்டுகள் போரிட்டு வெற்றிகொள்ள முடியாத யாழ்ப்பாணத்தை வென்று வந்துள்ளேன் என்பதுதான் இதன் பொருள். எனவே, தலைமைக் குருவும் சந்திரிகாவுக்கு ஆசி வழங்கினார். அப்படியாயின் யாழ்ப்பாணம் ஓர் அன்னிய நாடு என்பதுதான் சிங்களவரின் கணிப்பாக இருக்கிறது.

அதனை நினைவுபடுத்தத்தான் சந்திரிகா தலதா மாளிகை சென்று வெற்றியின் புகழுக்கு தானே உரியவர் என்பதனை நாட்டு மக்களுக்கு நினைவு படுத்தினார்.

இதற்கு முன்னர் சிறிமாவோ பண்டார நாயக்காவும், பிரேமதாசாவும் ஜனதா



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விமுதிக்குப் பெரமுனை (J.V.P.) யைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான இளைஞர்களைக் கொன்று இரண்டு தடவை அந்த இயக்கத் தினை அழித் தனர். 1971-ல் ஒரு தடவையும் 1989-ல் அடுத்த தடவையும் அழிக்கப்பட்டது. அப்போது யாரும் தலதா மாளிகைக்குச் சென்று ஆசிபெற வில்லை. அப்படியிருக்க யாழ்ப்பாணத்திற்கு மட்டும் எதற்கு ஆசி? ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக சிங்களவரின் அடிமனதிலிருந்த பகைமைதான் சந்திரிகாவின் மனதிலும் தோன்றிற்று. வெறும் பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கை மட்டும்தான் மேற்கொள் ளப்பட்டது. இப்போதும் அதனைத்தான் மேற்கொள்கிறோம் என்று கூறுவது வெறும் ஏமாற்று. தமிழருக்கு எதிரான யுத்தத்தைத்தான் சிங்கள அரசு மேற்கொண்டுள்ளது. சலுகை வழங்கப் போகிறோம் உரிமை வழங்கப் போகிறோம் என்றெல்லாம் கூறுவது அருகில் இருக்கும் இந்தியாவும் ஏனைய நாடுகளும் ஈழத் தமிழருக்கு உதவிக்கு வந்துவிடக் கூடாது என்பதற்காக சொல்லப்படுபவையே.

**வரலாற்றை மறைத்த அரசு**

சிங்களவரின் வருகைக்கு முதற்கொண்டு திராவிட இனம்தான் இலங்கையில் வாழ்ந்து வந்தது என்பதற்கான ஆதாரம் தமிழர் வரலாற்று ஆவணங்களில் மட்டுமல்ல சிங்கள வரது மகாவம்சத்திலும் எழுதப்பட்டுள்ளது. போர்த்துக்கீசரும், ஆங்கிலேயரும் அள்ளிச் சென்ற வரலாற்றுக் குறிப்புகள் போக எஞ்சிய வற்றை கொழும்பு ஆவணக் காப்பகங்களில் விட்டுச் சென்றனர் ஆங்கிலேயர். அந்த வரலாற்று ஆதாரங்கள் அனைத்தையும் சிங்கள ஆய்வாளரான பறணவிதாரண என்பவரும் அவரது தலைமையிலான குழுவினரும் சேர்ந்து சுதந்திரத்திற்குப் பின்னர் அழித்து விட்டனர். தமிழர்கள் வாழ்ந்ததற்கான புதை பொருள் களோ, கல்வெட்டுகளோ இலங்கையின் எந்த மூலையில் காணப்பட்டாலும் அவற்றினைக் கைப்பற்றி அழித்துவிடுவதுதான் அரசு இவர்களுக்கு வழங்கியிருந்த பொறுப்பாகும்.

வெள்ளையரது கைகளிலும் சிங்கள ஆட்சியாளரது கைகளிலும் சிக்கிவிடாமல் தனித் தனியாக பாதுகாத்து வைத்திருந்த வரலாற்று ஆவணங்களையும் சான்றுகளையும் மற்றும் நூல்களையும் பொது இடத்தில் வைத்துப் பாதுகாக்க வேண்டும் என்பதற் காகவே யாழ்ப்பாண மக்கள் ஒன்றுகூடி யாழ் நூலகத்தை அமைத்தனர். அனைத்து ஆவணங் களையும் அங்கே பாதுகாப்பாக வைத்தனர்.



யாழ் நகரை சிங்கள இராணுவம் ஆக்கிரமித்த பின்பு சந்திரிகாவின் மாமன் அனுரத்த ரத்தவத்தை சிங்கக் கொடியை ஏற்றுகிறார்.

**யாழ் நூலகம் எரிப்பு**

1981 ஜூன் மாதத்தில் நடைபெற்ற மாவட்ட சபைத் தேர்தல் பிரசாரத்திற்காக யாழ்ப்பாணம் வந்திருந்தனர் அமைச்சர் காமினி திசா நாயக்கா வும், சிறில்மத்தியூவும். யாழ் நகரிலிருந்து ஐந்து கிலோ மீட்டருக்கு அப்பால் இரண்டு பொலிஸ் காரர்கள் சுடப்பட்டார்கள். உடனே அங்கு விரைந்து சென்ற பொலிசார் சம்பவ இடத் திற்கு எதிரே இருந்த மிகப் பழமை வாய்ந்த கோபுரங்களைக் கொண்ட நாச்சிமார் கோயிலை தீயிட்டுக் கொழுத்தினர். யாழ் நகருக்குள் நுழைந்து பஸ் நிலையத்தையும் நவீன சந்தையையும், அதனைச் சுற்றிலும் இருந்த கடைகளையும் தீயிட்டனர். இந்தச் சம்பவம் நடந்து கொண்டு இருந்தவேளை அமைச்சர்கள் இருவரும் மாவட்ட செயலகத்திற்கு இரவு ஒரு மணியளவில் விரைந்தனர். இராணுவ உயர் அதிகாரிகள் உடனே அழைக்கப்பட்டனர். ஈழத் தமிழரது வரலாற்றுக் களஞ்சியத்தை அழித்து விடும்படி உத்தரவிட்டனர். இரவு இரண்டு முப்பது மணிக்கு பலத்த இராணுவப் பாது காப்புக்கு மத்தியில் நூலகம் தீயிடப்பட்டது. கட்டடத்திற்கு தீயிடுவதற்குப் பதிலாக கதவு களை உடைத்து உள்ளே நுழைந்து நூல்களைத் தான் எண்ணை ஊற்றித் தீயிட்டனர். அந்தத்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தீதான் கட்டடம் முழுவதும் பரவியது. சிங்கள ஆட்சியாளருக்குப் பயந்து பொது இடத்தில் பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சான்றுகள் அதே சிங்கள ஆட்சியாளரால் தீயிடப்பட்டது.

அசம்பாவிதத்தைப் பயன்படுத்தி தமிழர் வரலாறு அழிக்கப்பட்டது தற்செயலாக நடைபெற்ற சம்பவமல்ல, திட்டமிடப்பட்ட இராணுவ நடவடிக்கைதான் இச் செயல். தமிழ் இனத்தையே அடியோடு அழிப்பதன் உள் நோக்கம்தான் இது. அந்த நாட்டின் அமைச்சர்களே இதனைச் செய்கின்றனர் என்றால் சாதாரண சிப்பாய்கள் என்ன செய்வார்கள் என்பது புலனாகவில்லையா? உலகில் எந்த நாட்டிலாவது ஓர் அறிவுக் களஞ்சியத்தைத் தீயிட்டதாக வரலாறு உண்டா? பிரித்தானியாவைக் கைப்பற்றச் சென்ற தனது சிப்பாய்களிடம் நூலகத்தைப் பாதுகாக்க வேண்டும் என்று ஜெர்மன் சர்வாதிகாரி கிட்லர் கூறவில்லையா? இந்தச் சிங்கள ஆட்சியாளரை என்னவென்று சொல்வது?

## மேலும் மேலும் கொடுமைகள்

தமிழ் மக்களை அழித்துவிட வேண்டும் அல்லது விரட்டிவிட வேண்டும் என்பதுதான் துட்டகைமுனுவின் கொள்கை. இந்தக் கொள்கையை அனைத்து அரசுகளும் தவறாது கடைப்பிடித்து வருகின்றன. நாட்டைவிட்டு இதுவரை 12 இலட்சம் தமிழ் மக்கள் விரட்டப்பட்டு விட்டனர். தமிழ்நாட்டில் இருக்கும் ஒரு இலட்சம் ஈழத் தமிழர்கள் தவிர ஏனைய 11 இலட்சம் தமிழ் மக்கள் அகதிகளாக உலகின் அனைத்து நாடுகளிலும் தஞ்சம் அடைந்துள்ளனர்.

விரட்டப்பட்ட 12 இலட்சம் மக்கள் போக எஞ்சியவர்களை விரட்டி விரட்டி குண்டு போடுவதும், சுட்டுத் தள்ளுவதுமாக



சந்திரிகா



சிறிமாவோ பண்டாரநாயக்கா

கைமுனுவின் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. இது மட்டுமல்லாது வன்னிப் பகுதிகளில் தஞ்சமடைந்த நாலரை இலட்சம் மக்களுக்கு எந்தவகையான மருந்துப் பொருட்களும் சென்றடையாமல் நோயினால் இறந்து போவதற்கு ஏற்றவாறு தடைகளை ஏற்படுத்தி பிறிதொரு அழிவினையும் உண்டுபண்ணி வருகிறது சிங்கள அரசு.

புற்றுநோய், காசநோய், நீரிழிவுநோய், மலேரியா, செங்கமாரி, வயிற்றோட்டம், மூளைக்காய்ச்சல், செப்டிசேமியா போன்ற நோய்களால் பாதிக்கப் பட்டவர்கள் தினமும் இறந்து கொண்டுதான் இருக்கின்றனர். வன்னிப் பகுதி சுடுகாடுகளில் தினமும் நான்கு முதல் ஆறு உடல்கள்வரை தீயூட்டப்படுகின்றன. அனைவரும் நோயினால் இறப்பவர்கள். இது மட்டுமின்றி பாம்பு, அறணை போன்ற நச்சுப் பிராணிகளின் தீண்டுதலால் தினம் தினம் இருவராவது இறந்து கொண்டிருக்கின்றனர். எந்தவித யுத்தமும் இல்லாமல் இப்படி ஓர் அழிவினை சிங்கள அரசு ஏற்படுத்தியுள்ளதை எத்தனை பேர் அறிவார்கள்?

தமிழ் மக்களின் அடிச்சுவட்டையே அழித்துக் கொண்டிருக்கும் சிங்கள அரசு தமிழ் மக்களுக்கு உரிமை வழங்கப் போகிறது என்று கூற அதனையும் பல புதியவர்கள் வழி மொழிகின்றனர். ஈழத் தமிழரதும் சிங்களவரதும் வரலாறு தெரியாத இன்றைய ஆய்வாளர்கள் பல தவறான தகவல்களை உலகுக்குச் சொல்கின்றனர்.

## சிங்கள அரசுகளின் அநியாயம்

1949ம் ஆண்டு தமிழ் அமைச்சர் ஒருவரினால் ஏற்படுத்தப்பட்ட இரண்டு தொழிற்சாலைகளைத் தவிர இன்றுவரை ஒரு தொழிற்சாலையைக்கூட நிறுவ விடாமல் தடுத்து வந்தது சிங்கள அரசு. அப்படி இருந்த இரண்டு தொழிற்சாலைகளும் அரசினால் அழித்தொழிக்கப்பட்டுவிட்டது.

'தரப்படுத்துதல்' என்ற கொள்கையினைக் கொண்டு வந்து தமிழ் மாணவர்களது உயர் கல்வி யினைத் தடுத்தது சிங்கள அரசு. வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உணவுப் பயிர் மூலம் முன்னேற்றம் காணும் வேளை பார்த்து பிற நாடுகளில் இருந்து அவற்றை இறக்குமதி செய்து விலையில் வீழ்ச்சியை ஏற்படுத்தி தமிழ் விவசாயிகளை நலிவடையச் செய்தது சிங்கள அரசு. படைப் பிரிவுகளில் சிங்கள அரசர்களின் பெயர்களில் (கமுனு, சிங்கபாகு, கஜபாகு,



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விஜயபாகு) ரெஜிமென்டுகள் அமைத்து தமிழருக்கு எதிரான வெறியினை சிப்பாய் களுக்குப் போதித்தது சிங்கள அரசு. (ஒரு தமிழ் அரசனின் பெயரில்கூட ரெஜிமென்ட் கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது, அரச பதவிகளில் இருந்த தமிழர்கள் நீக்கப்பட்டு சிங்களவர்களை அமர்த்தியது சிங்கள அரசு. ஏன் நாட்டைக்கூட 1972ல் பௌத்த சிங்கள நாடு என்று அறிவித்தது. இப்படி அனைத்துத் துறைகளிலும் தமிழருக்கு எதிராகச் செயல் படுவதுதான் மாறி மாறி வந்த அரசுகளின் கொள்கையாக விருந்தது.

ஆட்சிக்கு வந்த சிங்களத் தலைவர்கள் கைமுனுவின் கொள்கையுடன் மேலும் ஒரு கொள்கையினைச் சேர்த்துக் கொண்டனர். அது இனமாற்றம் செய்வது! புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு போன்ற பகுதிகளைச் சுற்றி சிங்களவர் குடியேறியதும் அந்தப் பகுதித் தமிழ் மக்கள் ஐம்பது ஆண்டுகளில் சிங்கள இனமாகவே மாறிவிட்டனர். எனவே குடியேற்ற மும் ஓர் இன அழிப்புத் திட்டம்தான் என்று கண்டு சிங்களக் குடியேற்றத்தை அரசின் கொள்கைகளில் ஒன்றாக மாற்றி தீவிரமாகச் செயற்பட்டது சிங்கள அரசு. இதன் விளைவை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

**சிங்களக் குடியேற்றம்**

வெள்ளையர் இந்தியாவைக் கைப்பற்றும் போது பல மன்னர்களைக் கொண்ட பல நாடு களாகத்தான் இந்தியா இருந்தது. வெள்ளையர் வெளியேறியதும் டெல்லியில் அரசு அமைந்தது. அப்படி அமைந்த அரசு தமிழகத்திலிருக்கும் பெரும் நகரங்களான மதுரைக்கும் திருநெல் வேலிக்கும் இடையில், திருச்சிக்கும் தஞ்சா வூருக்கும் இடையில், திண்டுக்கல்லுக்கும் கோயம்புத்தூருக்கும் இடையில், சென்னைக்கும் விழுப்புரத்திற்கும் இடையில் என்று தமிழர் பகுதிகள் துண்டாடப்பட்டு அரசுச் செலவில் இலட்சக்கணக்கான ஆட்சிமொழி பேசும் வட மாநிலத்து மக்கள் குடியமர்த்தப்பட்டிருந்தால் இன்று தமிழ்நாடு என்னவாகி இருக்கும்?

இதனைத்தான் சிங்கள அரசு சுதந்திரம் பெற்ற அதே ஆண்டு செய்ய ஆரம்பித்து இன்று வரை செயற்படுத்திக் கொண்டு இருக்கிறது. மட்டக் களப்புக்கும் திருகோணமலைக்கும் இடையில், திருகோணமலைக்கும் முல்லைத் தீவுக்கும் இடையில், வவுனியாவுக்கும் மன்னாருக்கும் இடையில், வவுனியாவுக்கும் திருகோணமலைக்கும் இடையில் என்று லட்சக்கணக்கான சிங்களவரைக் குடியேற்



பண்டார நாயக்கா



ஜெயவர்த்தனா

றினர். இப்படித் தமிழர் பகுதிகள் துண்டாடப் பட்டன. இன்று உரிமை வழங்கப் போவதாகப் பேசுபவர்கள் யாரும் இதுபற்றி வாய் திறக்க வில்லை. தமிழ் மக்கள் தங்கள் உறவினர் களுடன் தொடர்புகொள்ள வேண்டுமாயின் இந்தச் சிங்களக் குடியேற்றங்களினூடாகத்தான் செல்ல வேண்டும். இன்றைய நிலையில் எந்தத் தமிழ்ப் பகுதிகளுக்கும் நேரடித் தொடர்பு கிடையாது.

**தமிழரின் நீண்ட போராட்டம்**

ஈழ மக்களின் விடுதலைப் போராட்டம் வெவ்வேறு வடிவங்களில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நடந்து வருகிறதென்பதே உண்மையான வரலாறு, மகாவம்சம், மேல் நாட்டு வரலாற்று நூல்களெல்லாம் இதை உறுதி செய்கின்றன. இரண்டு தேசிய இனங்கள் இரண்டு நாடுகளாய் வாழ்ந்த வரலாற்றை சிங்கள அரசு மூடிமறைக்க சகல முயற்சிகளும் செய்கிறது. ஆனால் இது அவ்வளவு சுலப மானதல்ல. சிங்களவரின் வரலாற்று இருட் டடிப்பை அறியாமல், பலர் ஈழத் தமிழரை சிங்களவரோடு ஒப்பந்தம் செய்து இணங்கி வாழச் சொல்வது அறிவுக்குப் பொருத்தமான தல்ல.

**சந்திரிகாவின் தந்திரம்**

சில சந்தர்ப்பவாதத் தமிழர்களைத் தயாரித் தெடுத்து அவர்களைத் தன் பக்கம் இருப்பதாகக் காண்பித்து அடுத்த கட்டத் தாக்குதலுக்குத் தயாராகிக் கொண்டிருக்கிறார் சந்திரிகா. இலங்கையின் தென்பகுதியில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல்களில் சந்திரிகாவுக்கு அமோக வெற்றி கிடைத்துள்ளது. இந்த வெற்றிக்கான அடிப்படைக் காரணத்தை சிங்களவர் தெரிவிக்கும்போது, “ஜெயவர்த்த னாவாலும் பிரேமதாசாவாலும் முடியாததை சந்திரிகா சாதித்துக் காண்பித்துள்ளார். யாழ்ப் பாணத்தையும் கிளிநொச்சியையும் தமிழரிட மிருந்து மீட்டுவிட்டார். நாங்கள் (சிங்களவர்) தொடர்ந்தும் ஒத்துழைப்புக் கொடுத்தால் எஞ்சிய பகுதியையும் மீட்டு முழு இலங்கை -



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யையும் எங்களது ஆட்சியில் கொண்டுவந்து விடுவார். அதனால்தான் நாங்கள் அவருக்கு (சந்திரிகாவுக்கு) வாக்களித்தோம்'' என்று கூறினர்.

தமிழரை வீழ்த்த சிங்களவர் ஒன்று பட்டு விட்டனர். தமிழர்களாகிய நாம்தான் பிரிந்து நிற்கிறோம். உதவி செய்யத் தயங்குகிறோம். இந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விட்டால் ஈழத்தில் தமிழினம் அழிக்கப்பட்டுவிடும். பலதர நாடகங் களையும் நடத்தி பல நாடுகளிடமிருந்து தேவை யான ஆயுதங்களையும் நிதியுதவிகளையும் சிங்கள அரசு பெற்றுக்கொண்டு தமிழரை அழிக்கிறது. மத்திய அரசுகூட கொழும்புக்குச் சென்று பருப்பும் உருளைக் கிழங்கும் கொடுத்து விட்டு, தேவையானதைக் கேளுங்கள் தருகிறோம் என்று உற்சாகப்படுத்திவிட்டு வந்துள்ளது. ஆனால் ஈழத் தமிழருக்காக யாரும் முன்வந்து குரல் கொடுக்கவில்லை என்பது வேதனையாக உள்ளது.

**வெட்கப்படாத சிங்களத் தலைவர்கள்**

தமிழர்களின் தலைவர்கள் பலர் சிங்களத் தலைவர்களுடன் உடன்பாடு கண்டு ஒப்பந் தங்கள் செய்து, அவற்றை சிங்களத் தலைவர் களே கிழித்து வீசிய வரலாறுகள் உலகம் அறிந்தவை. கையொப்பமிட்ட ஒப்பந்தத்தை கிழித்து வீசியதையிட்டு எந்தச் சிங்களத் தலைவ ராவது இன்றுவரை வருத்தம் தெரிவித்தார்களா? கிடையாது! உலகம் அறிந்த ஒப்பந்தம் ஒன்றினை கிழித்து வீசுகிறோமே, உலகம் எம்மைப்பற்றி என்ன நினைக்கும் என்று அவர்கள் வெட்கப்பட வேண்டாமா? எதனை யிட்டும் அவர்கள் வெட்கப்பட்டதில்லை.

இப்படியான சமாதானங்களையும் ஒப்பந் தங்களையும் கடந்து வந்த பின்னர் 1987ல் இந்திய இலங்கை ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. என்னவாயிற்று அந்த ஒப்பந்தம்? 'வெளியே போ' என்று சிங்கள அரசு இந்தியாவுக்குச் சொல்லவில்லையா? இவ்வளவு பெரிய உபகண்டத்துக்கே சவால் விட்டு ஒப்பந்தத்தைத் தூக்கி வீசியவர்கள் சிங்கள ஆட்சியாளர்கள். அவர்களுடன் இனி ஓர் ஒப்பந்தம் செய்து பார்க்கும்படி எதனை ஆதாரமாக வைத்துக் கேட்கின்றனர் இன்றைய அறிவு ஜீவிகள்?

தமிழ் மக்களுக்கென நாடொன்று கிடைத்து விடக்கூடாது என்பதற்காகத்தானே தீர்வு வரப் போகிறது, திட்டங்கள் தயாராகி விட்டது என்று ஏமாற்ற முனைகின்றனர் இவர்கள். ஒட்டுமொத்தத் தமிழினமும் இன்று அகதி களாக்கப்பட்டுத்தானுள்ளனர். சந்திரிகா தீர்வுத் திட்டம் ஒன்றினை அறிவிப்பார். அது மாவட்ட சபை அளவிலானதாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் எங்கள் மக்கள் இதுவரை இழந்திருப்பவை எவற்றிற்கும் சந்திரிகாவின் தீர்வுத் திட்டம் ஈடாகாது. அதனை சிங்கள ஆட்சியாளரால் ஈடு செய்யவும் முடியாது. அப்படித்தான் சந்திரிகா எதையாவது அறிவித்தாலும் யார் அதற்கு உத்தரவாதம் அளிப்பது? இனி ஒரு தடவை ஒப்பந்தம் செய்யவும் அதற்கு உத்தரவாதம் கொடுக்கவும் யாராவது முன் வந்தால் வரலாற்றை அறியாத அறிவிலிகள் என்றுதான் கொள்ள வேண்டும்.

ஈழத் தமிழர் போராட்ட இயல்பை, அதன் தேவையை நன்றாகவே அறிந்திருந்தவர் அமரர் திருமதி இந்திரா காந்தி. அதன் தொடர்ச்சியாக வந்தவர் அமரர் இராஜீவ் காந்தி. ஈழத் தமிழர் களின் கோரிக்கைகளில் உள்ள நியாயத்தை ஏற்றுக் கொண்டவர். துரதிருஷ்டவசமாக இராஜீவ்காந்தி உயிரிழந்தார். இந்தச் சம்பவத்தை மனதில் வைத்து ஒட்டுமொத்தமாக ஈழத் தமிழர்கள் மீதும், அவர்களின் போராட் டத்தின் மீதும் ஆதரவு காட்டாது மௌனம் சாதிப்பதும் எதிரான கருத்துக்கள் கூறுவதும் பொருத்தமான ஓர் நிலைப்பாடல்ல. சிலரின் தவறுக்காக அனாதரவாக நிற்கும் ஒரு தேசிய இனத்தைப் புறக்கணிப்பது எந்த விதத்திலும் நியாயமாகாது. சிலரது அதீத கற்பனை ஈழத் தமிழரை இன்றுவரை அழித்துக் கொண்டே இருக்கிறது.

ஈழத் தமிழரின் நிம்மதியும் பாதுகாப்பும் நிறைந்த வாழ்விற்கு "தமிழ் ஈழமே" ஒரே வழி. பல இலட்சக் கணக்கானோர் இதன் பொருட்டே வீடு, வாசல் யாவையும் இழந்து உலகெங்கும் சிதறி வாழ்கின்றனர். இவர்களின் கனவெல்லாம் ஒன்றே ஒன்றுதான். அந்த ஒரு விடிவு "தமிழ் ஈழமே". இது தவிர வேறெந்தப் பேச்சும் நிரந்தரத் தீர்வாகாது. தமிழக மக்கள் ஈழத் தமிழருக்குத் துணை நின்று இந்தத் தீர்வினை எட்ட வழி செய்ய வேண்டும். இன்றைய நிலையில் இந்தக் கடமை தமிழக மக்களுக்கு மட்டுமே உண்டு. கட்சிப் பேதங் களை மறந்து தமிழகத்தின் தலைவர்கள் ஒன்று பட்டு மத்திய அரசை தமிழ் மக்களுக்கு ஆதர வாக ஓர் நிலையை எடுக்க வற்புறுத்த வேண்டும். ஓர் இனத்தின் அழிவைத் தடுக்க ஒரு நாளாவது ஒன்றுபட்டுக் குரல் கொடுத்தால் நாற்பது இலட்சம் தமிழர்கள் உயிர் வாழ்வர்.

**ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி**
**[ஈ.என்.டி.எல்.எப்.]**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




**6/7, பூர்ணிமா குடியிருப்பு,**
இரண்டாவது பிரதான சாலை,
யுனைட்டெட் இந்தியா காலனி,
கோடம்பாக்கம், சென்னை-24.

**வெளியீடு**
**பிரச்சாரப் பிரிவு**
**ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி**
**(E.N.D.L.F.)**

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்